**முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை உதவி அமர்வு நீதிபதி.**
**S.C. No.55/2022**

அ.சா.1 தேதி. 24.06.2025

| பெயர் | கலையரசன் | த/பெ. | இராதாகிருஷ்ணன் |
|---|---|---|---|
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்த நேரம் இருட்டு நேரம் என்பதால் எங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியாது. மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வெற்று பேப்பரில் போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எனக்கு தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகாரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டது. பரிசீலனைக்கு பிறகு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பில் **குறுக்கு விசாரணை:–**

கடந்த 09.06.2020ஆம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் நான் எனது தம்பிகள் தமிழரசன் மற்றும் இளையராஜாவுடன் எங்கள் வயலுக்கு போனோம் என்றும், அப்போது EBயில் சொல்லி எங்கள் வயலில் உள்ள மின் இணைப்பை கட் பண்ணிட்டாங்க என்று பொதுவாக திட்டினோம்,. அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் என்னிடம் வந்து யாரை ஜாடையில் பேசுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நாங்கள் பொதுவாகத்தானே பேசினோம் என்று சொன்னால் சரியல்ல. ஜாடையில் பேசினீங்களே என்று சொல்லி எங்களை குச்சிகாரி மவனுங்களா தேவடியா மவனுங்களா என்று திட்டினார்கள். நாங்கள் அவரிடம் மறியாதையாக பேசுங்கன்று சொன்னோம்,. அதற்கு மாரிமுத்து உங்களுக்கு என்னடா மரியாதை இன்னைக்க ராத்திரி இருக்குடா உங்களுக்கு என்ற சொல்லிவிட்டு ஆவேசமாமக அங்கிருந்து போய்விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அன்று இரவு சுமார் 9 மணிக்கு நாங்கள் எங்கள் வீட்டிலிருந்துபோது எங்கள் ஊர் வடக்கு தெருவைச்சேர்ந்த துரைராஜ் மகன்கள் கார்த்திகேயன், பாலாஜி ராதாரவி மகன் பிரதீப்ராஜ் மற்றும் மாரிமுத்து மகன்கள் பிரபு,. பிரகாஷ் ஆகிய ஆறுபேரும் மூன்று இருசக்கர வாகனங்களில் கையில் அருவாள், இரும்பு பைப், உருட்டுக்கட்டை போன்ற ஆயுதங்களுடன் வீட்டு வாசலுக்கு வந்து

வாகனங்களை நிறுத்தி விட்டு, எங்களுக்கு எப்பவுமே நீங்க தான்டா எதிரியா இருக்கீங்க என்று கூறி இத்தோடு காலி பண்றோம்டா என்று திட்டிக்கொண்டேன கார்த்திகேயன் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் என் தலையில் ஓங்கி அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரபு அரிவாளால் எனது தம்பி தமிழரசனின் தலையில் ஓங்கி அடித்தார் என்றும், பாலாஜி உருட்டுக்கட்டையால் தடுக்க வந்த எனது தம்பி இளையராஜாவின் வலது கையிலும், இடது தோள்பட்டையிலும் மாறி மாறி அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. அதில் அவனுக்கு வலது கை விரல்களில் காயம் ஏற்பட்டது. அதைதடுக்க வந்த எனது தம்பி தமிழரசனை பக்கதில் நின்ற பிரகாஷ் உருட்டு கட்டையால் தாக்கினார். பிரதீப்ராஜா அரிவாளால் எனது வலதுகை மணிக்கட்டில் வெட்டினார். அப்போது மாரிமுத்து அவருடன் வந்த எல்லோரிடமும் இந்த குச்சிகாரி மகன்கள் எல்லோரையும் அடித்து வெட்டி காலி பண்ணுங்கடா என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. அப்போது எங்களை தாக்கியதில் எங்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது அதன் வலி தாங்க முடியாமல் கத்தியதை பார்த்து அங்கிருந்த தெருவாசிகள் கூட்டமாக சம்பவ இடத்திற்கு வருவதை பார்த்த எல்லோரும் மோட்டார் சைக்கிளில் ஓடிவிட்டார்கள். நாங்கள் மூவரும் மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம் என்றும் பின்னர் மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் சேர்ந்து உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது குத்தாலம் போலீசாரிடம் நான் சொன்னாதை எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதாலும் உறவினர் என்பதாலும் தனக்கே தெரிந்த காரணத்தினால் நடந்த விபரத்தை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>
<u>S.C. No.</u>55/2022

அ.சா.2 தேதி. 24.06.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழரசன் | த/பெ. | இராதாகிருஷ்ணன் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்,).

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 எனது அண்ணன் ஆவார். சம்பவம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்த நேரம் இருட்டு நேரம் என்பதால் எங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டது. பரிசீலனைக்கு பிறகு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பில் **<u>குறுக்கு விசாரணை:–</u>**

கடந்த 09.06.2020ஆம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் நானும் எனது அண்ணன் மற்றும் எனது தம்பி இளையராஜாவுடன் எங்கள் வயலுக்கு போனோம் என்றும், அப்போது EBயில் சொல்லி எங்கள் வயலில் உள்ள மின் இணைப்பை கட் பண்ணிட்டாங்க என்று பொதுவாக திட்டினோம்,. அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் என்னிடம் வந்து யாரை ஜாடையில் பேசுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நாங்கள் பொதுவாகத்தானே பேசினோம் என்று சொன்னால் சரியல்ல. ஜாடையில் பேசினீங்களே என்று சொல்லி எங்களை குச்சிகாரி மவனுங்களா தேவடியா மவனுங்களா என்று திட்டினார்கள். நாங்கள் அவரிடம் மறியாதையாக பேசுங்கன்று சொன்னோம்,. அதற்கு மாரிமுத்து உங்களுக்கு என்னடா மரியாதை இன்னைக்கு ராத்திரி இருக்குடா உங்களுக்கு என்ற சொல்லிவிட்டு ஆவேசமாமக அங்கிருந்து போய்விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அன்று இரவு சுமார் 9 மணிக்கு நாங்கள் எங்கள் வீட்டிலிருந்து போது எங்கள் ஊர் வடக்கு தெருவைச்சேர்ந்த துரைராஜ் மகன்கள் கார்த்திகேயன், பாலாஜி ராதாரவி மகன் பிரதீப்ராஜ் மற்றும் மாரிமுத்து மகன்கள் பிரபு,. பிரகாஷ் ஆகிய ஆறுபேரும் மூன்று இருசக்கர வாகனங்களில் கையில் அருவாள், இரும்பு பைப், உருட்டுக்கட்டை போன்ற ஆயுதங்களுடன் வீட்டு வாசலுக்கு வந்து வாகனங்களை நிறுத்தி விட்டு, எங்களுக்கு எப்பவுமே நீங்க தான்டா எதிரியா இருக்கீங்க என்று கூறி இத்தோடு காலி பண்றோம்டா என்று திட்டிக்கொண்டே கார்த்திகேயன் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் என் அண்ணன்

கலையரசன் தலையில் ஓங்கி அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரபு அரிவாளால் என் தலையில் ஓங்கி அடித்தார் என்றும், பாலாஜி உருட்டுக்கட்டையால் தடுக்க வந்த எனது தம்பி இளையராஜாவின் வலது கையிலும், இடது தோள்பட்டையிலும் மாறி மாறி அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. அதில் அவனுக்கு வலது கை விரல்களில் காயம் ஏற்பட்டது. அதைதடுக்க வந்த எனது பக்கதில் நின்ற பிரகாஷ் உருட்டு கட்டையால் என்னை தாக்கினார். பிரதீப்ராஜா அரிவாளால் எனது வலதுகை மணிக்கட்டில் வெட்டினார். அப்போது மாரிமுத்து அவருடன் வந்த எல்லோரிடமும் இந்த குச்சிகாரி மகன்கள் எல்லோரையும் அடித்து வெட்டி காலி பண்ணுங்கடா என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. அப்போது எங்களை தாக்கியதில் எங்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது அதன் வலி தாங்க முடியாமல் கத்தியதை பார்த்து அங்கிருந்த தெருவாசிகள் கூட்டமாக சம்பவ இடத்திற்கு வருவதை பார்த்த எல்லோரும் மோட்டார் சைக்கிளில் ஓடிவிட்டார்கள். நாங்கள் மூவரும் மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம் என்றும் பின்னர் மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் சேர்ந்து உள்நோயாளியாக நான் அண்ணனும் சிகிச்சையில் இருந்தபோது குத்தாலம் போலீசாரிடம் எனது அண்ணன் சொன்னாதை எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதாலும் உறவினர் என்பதாலும் தனக்கே தெரிந்த காரணத்தினால் நடந்த விபரத்தை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,

முதன்மை உதவி அமர்வு நீதிபதி.

S.C. No.55/2022

அ.சா.3 தேதி. 24.06.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இளையராஜா | த/பெ. | இராதாகிருஷ்ணன் |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1, அசா2 எனது அண்ணன்கள் ஆவார். சம்பவம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். சம்பவம் நடந்த நேரம் இருட்டு நேரம் என்பதால் எங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டது. பரிசீலனைக்கு பிறகு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பில் **குறுக்கு விசாரணை:–**

கடந்த 09.06.2020ஆம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் நானும், எனது அண்ணன்களுடன் எங்கள் வயலுக்கு போனோம் என்றும், அப்போது EBயில் சொல்லி எங்கள் வயலில் உள்ள மின் இணைப்பை கட் பண்ணிட்டாங்க என்று பொதுவாக திட்டினோம்,. அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் எனது அண்ணன் கலையரசனிடம் வந்து யாரை ஜாடையில் பேசுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நாங்கள் பொதுவாகத்தானே பேசினோம் என்று சொன்னால் சரியல்ல. ஜாடையில் பேசினீங்களே என்று சொல்லி எங்களை குச்சிகாரி மவனுங்களா தேவடியா மவனுங்களா என்று திட்டினார்கள். நாங்கள் அவரிடம் மறியாதையாக பேசுங்கன்று சொன்னோம்,. அதற்கு மாரிமுத்து உங்களுக்கு என்னடா மரியாதை இன்னைக்கு ராத்திரி இருக்குடா உங்களுக்கு என்ற சொல்லிவிட்டு ஆவேசமாமக அங்கிருந்து போய்விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அன்று இரவு சுமார் 9 மணிக்கு நாங்கள் எங்கள் வீட்டிலிருந்து போது எங்கள் ஊர் வடக்கு தெருவைச்சேர்ந்த துரைராஜ் மகன்கள் கார்த்திகேயன், பாலாஜி ராதாரவி மகன் பிரதீப்ராஜ் மற்றும் மாரிமுத்து மகன்கள் பிரபு,. பிரகாஷ் ஆகிய ஆறுபேரும் மூன்று இருசக்கர வாகனங்களில் கையில் அருவாள், இரும்பு பைப், உருட்டுக்கட்டை போன்ற ஆயுதங்களுடன் வீட்டு வாசலுக்கு வந்து வாகனங்களை நிறுத்தி விட்டு, எங்களுக்கு எப்பவுமே நீங்க தான்டா எதிரியா இருக்கீங்க என்று கூறி இத்தோடு காலி பண்றோம்டா என்று திட்டிக்கொண்டே கார்த்திகேயன் தன் கையில் வைத்திருந்த இரும்பு பைப்பால் என் அண்ணன்

கலையரசன் தலையில் ஓங்கி அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. பிரபு அரிவாளால் எனது அண்ணன் தமிழரசனின் தலையில் ஓங்கி அடித்தார் என்றும், பாலாஜி உருட்டுக்கட்டையால் தடுக்க வந்த எனது வலது கையிலும், இடது தோள்பட்டையிலும் மாறி மாறி அடித்தார் என்று சொன்னால் சரியல்ல. அதில் எனக்கு வலது கை விரல்களில் காயம் ஏற்பட்டது. அதைதடுக்க வந்த எனது பக்கதில் நின்ற பிரகாஷ் உருட்டு கட்டையால் எனது அண்ணன் தமிழரசனைத் தாக்கினார். பிரதீப்ராஜா அரிவாளால் அண்ணன் தமிழரசனின் வலதுகை மணிக்கட்டில் வெட்டினார். அப்போது மாரிமுத்து அவருடன் வந்த எல்லோரிடமும் இந்த குச்சிகாரி மகன்கள் எல்லோரையும் அடித்து வெட்டி காலி பண்ணுங்கடா என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. அப்போது எங்களை தாக்கியதில் எங்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டது அதன் வலி தாங்க முடியாமல் கத்தியதை பார்த்து அங்கிருந்த தெருவாசிகள் கூட்டமாக சம்பவ இடத்திற்கு வருவதை பார்த்த எல்லோரும் மோட்டார் சைக்கிளில் ஓடிவிட்டார்கள். நாங்கள் மூவரும் மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம் என்றும் பின்னர் மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் சுகம் மருத்துவமனையில் சேர்ந்து உள்நோயாளியாக அண்ணன்கள் சிகிச்சையில் சேர்ந்தாரகள் என்றால் சரியல்ல. எதிரிகள் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்பதாலும் உறவினர் என்பதாலும் தனக்கே தெரிந்த காரணத்தினால் நடந்த விபரத்தை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணை இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.